**உடுபத்தாவ பிரதேச சபை**
**குருணாகல் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கையும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையும் 2019 மே 31 ஆந்திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து உடுபத்தாவ பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 82,737 ஆன நிறுத்தி வைத்தல் தொகை நடைமுறைப் பொறுப்பின் பதிவு செய்யப்பட்டிருந்தது. | சீராக்கம் செய்யப்பட வேண்டும் | அப்பெறுமதியை 2019 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 04 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதி மற்றும் உரிய அட்டவணைக்கிடையே ரூபா ரூபா 5,779,257 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | உரிய மீதிகளில் வேறுபாடு ஒப்பிடப்பட்டு கணக்குகள் சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் | வேறுபாடு கண்டு பிடிக்கப்பட்டு அம் மீதிகளை சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | ரூபா 136,557,398 ஆன 03 கணக்கு விடயங் களுக்குரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது | நிதிக் கூற்றுக்களில் காணப்படும் மீதிகள் உறுதிப்படுத்தும் | எதிர்காலத்தில் ஆவணங்கள் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

| | |
|---|---|
| திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த | சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றம் முகாமைத் தீர்மானங்களுடனான இணக்கமின்மை கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 154(1) ஆம் பிரிவு | காணிகளை துண்டுகளாக்கி விற்பனை செய்யும் விலையில் 1 சதவீதம் அறவிடப்பட வேண்டிய போதிலும் மதிப்பிடப்பட்ட விற்பனை விலையில் 01 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுக்கு இணங்க செயற்பட வேண்டும். | பின்னர் விற்பனை விபரங்களுக்குரிய நிலுவை வரிகளை செலுத்துமாறு கம்பனிக்கு தெரியப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபை நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள் 218 ஆம் விதி | சபைக்குச் சொந்தமான சகல காணி மற்றும் கட்டிடங்கள் ஆண்டிற்கு ஒரு தடவை பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டி ருக்கவில்லை. | விதிகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். | காணி மற்றும் கட்டிடங்கள் துறைக்காக கணிப்பீட்டு சபையொன்று இப்போது நியமிக்கப்பட்டுள்ளதுட ன் கணிப்பீட்டின் பின்னர் பெற்றுக் கொண்ட சரியான தகவல்களின் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்கள் பதிவேட்டினை சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 27,297,032 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 33,295,405 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரியும் வரியும் | 3,826 | 4,244 | 3,984 | 2,208 | 3,391 | 4,481 | 3,888 | 1,838 |
| ii. | வாடகை | 12,766 | 11,820 | 12,681 | 26 | 11,600 | 10,556 | 10,492 | 137 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 748 | 800 | 800 | - | 768 | 567 | 567 | - |
| iv. | ஏனைய வருமானம் | 18,629 | 30,207 | 30,207 | 69,548 | 73,090 | 77,025 | 50,617 | 86,262 |
| | மொத்தம் | 35,969 | 47,071 | 47,672 | 71,782 | 88,849 | 92,629 | 65,564 | 88,237 |

### 2.2.2 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 3,391,168 தொகை மற்றும் முத்திரைக்கட்டணம் ரூபா 57,952,358 ஆக இருந்தது. | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன அறவிடப்பட வேண்டும். | குளியாபிட்டி நீதிவான் நீதிமன்றத்தின் பதிவாளரால் அனுப்பிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் தலைமைச் செயலகம் வழங்கிய நீதிமன்ற தண்டப்பணம் ஆகியவற்றுக்கு இடையே முரண்பாடுகள் காணப்படுவதால் 2015 ஆம் ஆண்டு முதல் அறவிடுவதற்குள்ள நீதிமன்றத் தண்ட பணத்தை இதுவரை அறவிட முடியவில்லை என அறிய தருகின்றேன் |

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) உப விதிகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | முச்சக்கர வண்டி வாகன நிறுத்துமிடம், வாராந்த சந்தை செயற்பாடுகளை முறைப்படுத்தல், மற்றும் தகன மற்றும் விளம்பர பலகைகள் தொடர்பான உப விதிகளை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இச்செயற்பாட்டை முறைப்படுத்துவதற்காக உப பிறப்பிக்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வாரச்சந்தையை முறைப்படுத்துவதற்காக உப விதிகளை தயாரிப்ப தற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | வீடு ஆதனங்கள் அபிவிருத்திக்குரிய உப விதிகளை மீறுதல் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | உப விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் | வீடு ஆதனங்கள் நிர்மாணங்கள் தொடர்பாக சிக்கல் ஏறபடும் சந்தர்ப்பங்களில் உரிய தரப்பினருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டு தவறான அளவீடுகளுக்கு இணங்க தயாரிக்கமுறாறு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் பயன்படுத்தப்படும் 02 வாகனங்கள் விளையாட்டரங்கு மற்றும் 43 பொது மயானங்களை கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்பிற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பி எதிர்காலத்தில் அதற்காக நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |

**3.1 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கையை மிகைத்து 14 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். | பதவியணியினரை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உள்ளூராட்சிமமன்ற நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எமது நிறுவனத்திற்கு இணைக்கப்பட்டுள்ளதாக வும் 25/2014 ஆட்சேர்ப்பு அடிப்படையில் மிகை ஊழியர் இருப்பதாகவும் அறிய தருகின்றேன். |

**3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மினிஜய விலேஜ் கட்டம் I மற்றும் II காணிக்குரிய காணித்துண்டு திட்டத்தின் பிரகாரம் சபையினால் அங்கீகரிக்கப்படாதிருக்கையில் காணி அபிவிருத்தி செய்யப்பட்டு விற்பனைக்காக தயார் படுத்தப்பட்டிருந்தது. | உப விதிக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அத்துமீறிய காலப்பகுதியில் அபிவிருத்தி நடவடிக்கைகள் செயற்படுத்துவதாக அவதானிக்கப்பட்டதன் பின்னர் அவற்றை உடனடியாக நிறுத்துமாறு குறித்த கம்பனிக அறிவூட்டப்பட்டுள்ளது. |

**3.5 விளைவற்ற குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கந்தயாய தோட்ட திண்மக்கழிவுப்பொருள் ிலையக் காணிக்கு அண்மையில் ஆரம்பிக்கப்பட்டு பேணிச்சென்றிருந்த இடைக்டை தொடர்பான அச்சுக்கள் செயற்திட்டம் 2015 ஆம் ஆண்டு முதல் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. | குறைப் பயன்பாட்டிற்குட்பட்ட சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கொங்கிரீட் கல் செயற்திட்டம் மீண்டும் ஆரம்பிபதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக |

## 3.6 பெறுகைகள்

--------------------

### பெறுகை திட்டம்

-----------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை | பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

## 4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

-------------------------------------------------------------------

## 4.1 உள்ளகக் கணக்காய்வு

---------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | போதியளவில் உள்ளகக் கணக்காய்வு பிரிவின் சுயாதீனம் பாதுகாக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைளுக்கு மேலதிகமாக வேறு விடயங்களும் இருப்பதால் முறைப்படி உரிய கணக்கய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமையால் உத்தியோகத்தர்களை நியமிக்க முடியாததுடன் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்களுக்கு கணக்காய்விற்கு தடையில்லாத வகையில் கடமைகள் கையளிக்கப்பட்டுள்ளன. |